**செ. கு. எண்: 391** **நாள்: 04.11.2012**

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 4.11.2012

1) திருப்பூர் மாவட்டத்திலுள்ள **அமராவதி அணையிலிருந்து** திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களிலுள்ள பழைய பாசன பகுதிகளுக்கு சம்பா பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடக் கோரி அமராவதி பழைய வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்கத்தினர் உள்ளிட்ட திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களின் வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, **அமராவதி அணையிலிருந்து** பாசனத்திற்காக **5.11.2012 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள **29,387 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும்;

2) தேனி மாவட்டத்தில் உள்ள **வைகை அணையிலிருந்து** பெரியாறு பிரதானக் கால்வாயின் கீழ் உள்ள நிலங்களுக்கும் மற்றும் திருமங்கலம் பிரதானக் கால்வாயின்கீழ் உள்ள நிலங்களுக்கும் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, வைகை அணையிலிருந்து பாசனத்திற்காக **9.11.2012 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், மதுரை, திண்டுக்கல் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள **1,50,043 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும்;

3) தேனி மாவட்டத்தில் உள்ள **பெரியார் அணையிலிருந்து** கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள பி.டி.ஆர். மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்களின் கீழ் உள்ள நிலங்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு தேனி மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பெரியார் அணையிலிருந்து பாசனத்திற்காக **9.11.2012 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தேனி மாவட்டம், தேனி மற்றும் உத்தமபாளையம் வட்டங்களில் உள்ள **5,146 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9